**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 422/2025 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. கோபாலகிருஷ்ணன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 29.06.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலைச் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். சுமார் 1 வருடத்திற்கு முன்பு என் வீட்டின் அருகே நின்றுக்கொண்டிருந்தபோது என்னை யாரோ அடித்துவிட்டார்கள். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது. சந்தேகத்தின் அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது புகார் மனுக் கொடுத்துவிட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு சந்தேகத்தின் அடிப்படையில் நான் கொடுத்தது தான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. மேற்படி சம்பவத்திற்கு பிறகு ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது தவறு இல்லை என தெரிய வந்ததால் நாங்கள் ராசியாகி சமாதான மனு தாக்கல் செய்துள்ளோம்.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

1. நானும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபரும் சமாதானமாகிவிட்டோம் என்றால் சரிதான். சமாதான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். **மேற்படி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

2. கடந்த 11.05.2025ம் தேதி மாலை 05.30 மணியளவில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னை வழிமறித்து தகாத வார்த்தையால் பேசி காயம் ஏற்படுத்தினார் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்சமயம் நான் சமாதானமாகிவிட்டதால் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 422/2025 P.W. 2 Additional Witnesses**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. கார்த்தீபன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 29.06.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது இரணியல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்த பிரான்சிலின் சுனில் மற்றும் உதவி ஆய்வாளர் முத்துகிருஷ்ணன் ஆகியோர்களை நன்கு தெரியும். அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்தை நன்கு அறிவேன். வழக்கின் தன்மை கருதி வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 12.05.2025 ம் தேதி 12.00 மணிக்கு முதல் நிலை காவலர் நிலையப்பொறுப்பில் இருந்த போது கோபாலகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகார் மனுவின் தன்மைப்படி காவல்நிலையக்குற்ற எண். 299/2025 சட்டப்பிரிவுகள் 296(b), 126(2), 115(2), 118(1), 351(3) BNS 2023 ன் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்துள்ளார்.

3. மேற்படி வழக்கு கோப்பை உதவி ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்ததை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 12.05.2025ம் தேதி 18.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகும்.** சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றுள்ளார்.

4. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கைப்பதிவுச் செய்த முதல்நிலை காவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். சாட்சி 1க்கு சிகிட்சை அளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்று பெற்றுள்ளார். **அந்த காயச்சான்று அ.சா.ஆ. 6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

5. இத்துடன் வழக்கின் விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

சம்பவயிடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் புகார் மனுவினை முறைப்படி விசாரணை செய்யாமலும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சித்தரித்து இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்ப்பும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.